முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.75/2018** **PW: 1** **07.04.2026**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07 ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியாகிய சுரேஷ்ராஜா என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ்ராஜா | வயது | 45 |
| த/பெயர் | முருகேச நாயக்கர் | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் (அடரி) |
| வட்டம் | வேப்பூர் | கிராமம் | மங்களூர் |
| மாவட்டம் | கடலூர் | | |

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் 2008 ஆம் ஆண்டிலிருந்து கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நான் வழக்குச் சொத்தை எந்த காலத்திலும் அளந்து பார்க்கவில்லை. வரதராஜ நாயக்கர் குமார்கள் முருகேசன் மற்றும் கொளஞ்சியப்பன், முருகேசன் மகன் நான். வழக்கு தாக்கல் செய்த காலமான 2018 ஆம் வருடத்தில் வழக்குச் சொத்தின் புரூபத்தை காண்பிக்க நான் நீதிமன்ற ஆணையர் மனு தாக்கல் செய்யவில்லை. நான் பிராதுடன் தாக்கல் செய்த வரைபடம், நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. வரைபடத்தில் கண்டுள்ளபடி புரூபத்தில் சொத்து உள்ளதா என்றால் உள்ளது. எதிர்வாதிகள் தரப்பில் வழக்குச் சொத்தின் புரூபத்தை காண்பிக்க நீதிமன்ற ஆணையர் மனு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும். எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் மனு எண்.319/2018 என்ற மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமிக்க அவசியமில்லை என்று நான் எனது எதிருரை தாக்கல் செய்திருந்தேன். நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை பார்த்து விரிவான அறிக்கை தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் அறிக்கை தவறாக உள்ளது. அறிக்கை தவறாக உள்ளது என்று ஆட்சேபணை நான் தாக்கல் செய்துள்ளேன்.

நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் உள்ள வரைபடத்தின் நான்கெல்லையில் உள்ள உரிமையாளர்கள் பெயர் சரியாகதான் உள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.1, வரைபடம் நீ.ம.சா.2 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது. ஆணையர் வரைபடத்தில் புல எண்.462/2 பி -ல் 88 செண்ட் என்பது பட்டா நிலம், அதற்கான பட்டா எண்.12071

சுப்ரமணியன் பெயரில் உள்ளது. அதற்கு தெற்கில் புல எண்.514/3 ஏ என்னுடைய நிலம், அதற்கான பட்டா எண்.1928. புல எண்.462/2 பி நேர் கிழக்கில் புறம்போக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புறம்போக்கிற்கு நேர் கீழ்புறமாக பெட்ரோல் பங்க் உள்ளது என்றால் சரிதான். புறம்போக்கிற்கு நேர் வடக்காக I K K செல்லும் இடம் தார் ரோடு என்றால் அந்த புறம்போக்குதான் தார் ரோடு. புறம்போக்கு ஒரு புல எண் மற்றும் தார் ரோட்டிற்கு மற்றொரு புல எண்ணில் உள்ளது என்றால் இல்லை. இரண்டும் ஒரே புல எண்ணில்தான் உள்ளது. ஆனால் அந்த புல எண் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் Combined FMB –ல் புல எண்.462/2 பி–க்கு நேர் கீழ்புறத்தில் புல எண்.462/3 உள்ளது. அது அரசு புறம்போக்கு என்றால் எனக்கு தெரியாது. அரசு ஆ பதிவேட்டில் புல எண்.462/3 அரசு புறம்போக்கு என்று உள்ளதா என்றால் சரிதான். குறிப்புதளத்தில் சாலை என்று உள்ளது. புல எண்.462/3 க்கு கீழ்புறமாக புல எண்.461 உள்ளது என்றால் இந்த வரைபடத்தில் உள்ளது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்துவைக்கப்பட்டது.**

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI

Digitally signed by N SHALINI
Date: 2026.04.30 15:07:47 +0530

**Principal District Munsif,(F.A.C)**
**Tittagudi.**